# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
# TIRUVANNAMALAI
## O.S. No. 209 /2022

**Date: 09.04.2025**

**வா.சா. 2 ராஜேஸ்வரி க/பெ.முருகன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நானும் என் கணவரும் தற்போது ஒரே குடும்பமாக ஒரே வீட்டில் இருக்கிறோம் என்றால் இல்லை . நான் நாகப்பாடியில் உள்ள கல்லூரி அருகில் குடியிருக்கிறேன். என் கணவர் எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. வாதிகளான என் பிள்ளைகளும் என் கணவரான 1ம் பிரதிவாதியும் ஒரே முகவரியில் குடியிருப்பதாக தாவாவில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை எனக்கு நன்றாக தெரியும் என்றால் சொத்தை வாங்கிய பிறகு தான் தெரியும். தாவா சொத்து என் கணவரின் தகப்பனாருக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான் . என் கணவர் அவர் தந்தை மற்றும் அவரின் இன்னொரு மகன் ஆகியோருடன் ஏற்படுத்திக்கொண்ட பாக பிரிவினையில் தாவா சொத்து என் கணவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து என் கணவரின் தனிப்பட்ட சொத்தாகிவிட்ட காரணத்தினால் அதில் பாகம் கோர என் பிள்ளைகளுக்கு எந்தவித உரிமையும் இல்லையென்று சொன்னால் அது பூர்வீக சொத்தாகும் . ஏற்கனவே 2ம் பிரதிவாதியிடம் என் கணவர் வாங்கிய ரூ . 5 லட்சம் கடனையும், என் சகோதரியிடம் செய்த அடமானத்தின் ரூ . 4,25,000/- பைசல் செய்யவும் தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு என் கணவர் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற பின் 2ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து 2ம் பிரதிவாதி சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. என் கணவர் குடிகாரர் என்பதாலும் அவர் குடும்பத்திற்கு அனுசரணையாக இல்லை

என்பதாலும் அவரை 2018 ல் இருந்து பிரிந்து வாழ்கிறேன் . என் கணவர் குடிகாரர் இல்லை என்றும் அவர் தான் என் பிள்ளைகளை படிக்க வைத்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் இல்லை . என்னுடைய மகள் விஜயகுமார் என்பவர் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் என்னுடைய பிள்ளைகளை தூண்டிவிட்டு இந்த தவறான வழக்கை தாக்கல் செய்ய வைத்து 2 ம் பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்கிறேன் என்றால் சரியல்ல . நான் 2 ம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிப்பதற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.